# T/ St.Mary's College (National School)
## Trincomalee
## Fifth Term Examination – March 2022

**Grade – 13 Com (A/L2022)** **32** **T** **Business Studies II** **Time: 3 Hrs & 10Min**

***அறிவுறுத்தல்கள் :***

❖ ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஆகக் குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.

## பகுதி 'A'

### வினா 01

அஸ்வின் துணிகளைக் கொள்வனவு செய்து "சேட்" தைத்து விற்பனை செய்யும் நிறுவனம் ஒன்றினை நடாத்தி வருகின்றார். இவர் ஆடை வடிவமைப்புத் தொடர்பாக பயிற்சி பெற்றவர். நிதி நெருக்கடி காரணமாக வணிக செயற்பாட்டினை மையமாகக் கொண்டு இலங்கை வங்கியில் கடன் ஒன்றினைப் பெற்றுக் கொள்ள விண்ணப்பித்துள்ளார்.
மேற்குறித்த விடயங்களைக் கருத்திற் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(i) அ) இவ்வணிகத்தின் மூலம் பூர்த்தி செய்யப்படும் தேவை யாது?
ஆ) இவ்வணிகத்தின் மூலம் பூர்த்தி செய்யப்படும் விருப்பம் யாது?

(ii) தேவைக்கும் விருப்பத்திற்கும் இடையிலான வேறுபாடுகள் நான்கினை அட்டவணை ஒன்றின் மூலம் வேறுபடுத்திக் காட்டுக.

(iii) அ) மேற்குறித்த வணிகத்தின் பலம் ஒன்றினையும் பலவீனம் ஒன்றினையும் குறிப்பிடுக.
ஆ) பலவீனத்தை பலமாக மாற்றக்கூடிய ஆலோசனை ஒன்றினை முன்வைக்குக.

(iv) அ) பொருளாதார வாழ்தன்மைக்கு வணிகங்கள் பங்களிப்புச் செய்யக்கூடிய முறைகள் நான்கினைக் குறிப்பிடுக.
ஆ) வணிகமொன்றின் நோக்கங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(v) அ) வணிகப் பரம்பலின் படிமுறையை ஒழுங்கில் தருக.
ஆ) இலத்திரனியல் வர்த்தகம் நிகழ்காலத்தில் பிரபல்யமடைவதில் தாக்கத்தை ஏற்படுத்திய காரணங்கள் இரண்டு தருக.

( 20 புள்ளிகள் )

### வினா 02

(i) (அ) "நிலைபேறான அபிவிருத்தி" என்பதனை விளக்குக.
(ஆ) சமூகப் பொறுப்புக்கள் தொடர்பாக வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினர்களுக்கும், பொதுவாக சமூகத்திற்கும் அழுத்தங்களை ஏற்படுத்தும் காரணிகள் மூன்றினைக் குறிப்பிடுக.

(ii) (அ) வணிகங்களினால் சமூக ரீதியான பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டிய பிரிவினர் நால்வரைக் குறிப்பிடுக.
(ஆ) மேலே நீர் குறிப்பிட்ட பிரிவினர்களில் மூவரைத் தெரிவு செய்து அவர்கள் ஒவ்வொருவருக்கும் வணிகத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய சமூக ரீதியான பொறுப்புக்கள் இரண்டு வீதம் தனித்தனியே முன்வைக்குக.

(iii) (அ) சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதன் மூலம் வணிகம் ஒன்று அனுபவித்துக் கொள்ளக் கூடிய நான்கு நன்மைகளைப் பட்டியலிடுக.
(ஆ) பொருளாதார நிலைபேறான அபிவிருத்தியின் மூலம் எதிர்பார்க்கப்படும் 3 அடைவுகளைக் குறிப்பிடுக.

(iv) வணிக நிறுவனங்கள் சமூக கலாசார நிலபேறான தன்மைகளை உறுதி செய்வதற்குக் கருமமாற்றும் பொழுது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் ஐந்தினைப் பட்டியலிடுக.

(v) "வணிக ஒழுக்க விழுமியம்" என்னும் பதத்தினை விளக்கி, வணிக ஒழுக்க நெறிமுறைகளைப் பின்பற்றுவதால் வணிக நிறுவனமொன்று பெற்றுக் கொள்ளக் கூடிய நன்மைகள் நான்கினையும் குறிப்பிடுக.

( 20 புள்ளிகள் )

**வினா 03**

(i) (அ) அரசினால் வணிகங்களுக்கு கிடைக்கும் உதவிகள், வழிகாட்டல்கள் என்பன முக்கியத்துவம் பெறும் முறைகள் நான்கினைக் குறிப்பிடுக.

(ஆ) இலங்கையிலுள்ள வணிகங்கள் மீது அரசானது பல்வேறு வழிகளில் செல்வாக்கினைச் செலுத்துகின்றது. இந்த வகையில் மத்திய அரசு, மாகாண சபை, உள்ளூராட்சி நிறுவனங்கள் என்பன வணிகத்தின் வாடிக்கையாளராக செயற்படுவதற்கான ஒவ்வொரு சந்தர்ப்பங்களை தனித்தனியே குறிப்பிடுக.

(ii) (அ) பொருளாதார நிலைப்புத் தன்மையின் இரு பிரிவுகளும் எவை?

(ஆ) அரசின் பொருளாதார நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு வணிகங்கள் பங்களிப்பு வழங்கும் முறைகள் மூன்றினைக் குறிப்பிடுக.

(iii) (அ) ''அரசிற்கும் வணிகத்திற்குமிடையே மிக நெருங்கிய தொடர்பொன்றைப் பேணிக் கொள்வது மிக முக்கியமானதாகும்'' இக்கூற்றுடன் நீர் உடன்படுகிறீரா? நியாயப் படுத்துக.

(ஆ) அரசிற்கு வருமானம் கிடைக்கும் இரு பிரதான மூலங்களையும் குறிப்பிடுக.

(iv) இலங்கை மத்திய வங்கியானது நிதிக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்காக பயன்படுத்துகின்ற நிலையான வசதி விகிதங்கள் மூன்றினையும் குறிப்பிட்டு அவற்றில் இரண்டினைச் சுருக்கமாக விளக்குக.

(v) இலங்கை தரக் கட்டளைகள் பணியகத்தின் தொழிற்பாடுகள் ஐந்தினைக் குறிப்பிடுக.

( 20 புள்ளிகள்)

**வினா 04**

(i) (அ) ''அமைப்பு'' என்ற பதம் குறிப்பது என்ன?

(ஆ) ஒழுங்கு முறையான அமைப்பொன்றில் காணப்படக்கூடிய பொதுப்பண்புகள் மூன்று தருக.

(ii) (அ) பங்குடைமை ஒப்பந்தமொன்றில் உள்ளடங்க வேண்டிய விடயங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(ஆ) தனியாளுடைமை வணிகம் - பங்குடைமை வணிகம் ஒப்பிடுக.

(iii) (அ) கூட்டுறவு வணிகத்தின் வளர்ச்சிப் போக்குகள் நான்கினைக் குறிப்பிடுக.

(ஆ) வரையறுக்கப்பட்ட தனிக் கம்பனி – வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனி ஒப்பிடுக

(iv) அங்கீகார வணிகங்களின் வரையறைகளை பின்வரும் தரப்பினரை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.
(அ) அங்கீகாரம் வழங்குபவருக்கு
(ஆ) அங்கீகாரம் பெறுபவருக்கு

(v) உரிமையின் அடிப்படையில் வணிக வகைப்படுத்தலை பாய்ச்சல் கோட்டு அட்டவணையின் மூலம் முன்வைக்குக.

( 20 புள்ளிகள் )

## பகுதி 'B'

**வினா 05**

(i) (அ) முயற்சியாளருக்கும் வணிகருக்குமிடையிலான வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

(ஆ) முயற்சியாண்மையின் பொதுவான பண்புகள் எவை?

(ii) (அ) முயற்சியாண்மைத் திறன்களைக் குறிப்பிடுக.

(ஆ) முயற்சியாண்மைப் பண்புகளையும் திறன்களையும் விருத்தி செய்து கொள்வதற்கான முறைகளைக் தருக.

(iii) (அ) முயற்சியாண்மையின் போக்குகள் எவை?

(ஆ) முயற்சியாண்மைக்கும் பொருளாதார விருத்திக்குமிடையிலான தொடர்பினை விளக்குக.

(iv) முயற்சியாண்மையின் மூலம் (அ) முயற்சியாளருக்கு (ஆ) நிறுவனத்திற்கு (இ) சமூக, பொருளாதாரத்திற்கு கிடைக்கப் பெறுகின்ற நன்மைகள் இரண்டு வீதம் குறிப்பிடுக.

(v) முயற்சியாண்மைச் செயன்முறையின் படிமுறைகளைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.

( 20 புள்ளிகள்)

## வினா 06

(i) அ) பல தனியாளுரிமை வணிகங்கள் உருவாகி குறைந்த காலங்களில் தோல்வியை எதிர்கொள்கின்றன. தோல்வியை எதிர்கொள்வதற்கான வரையறைகள் நான்கினை நிரற்படுத்துக?

ஆ) பங்குடமை வணிகத்தில் பங்குடமை ஒப்பந்தமொன்று முக்கியம் பெறுவதற்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக?

(ii) அ) கம்பனி ஒன்றினை பதிவு செய்வதற்கு சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் நான்கினை நிரற்படுத்துக.

ஆ) இலங்கையில் அநேகமான பிரதேசங்களில் வரையறுக்கப்பட்ட கம்பனிகள் உருவாக்கப்படுவது மிகக் குறைவாகும். இதன் வரையறைகள் நான்கினைக் குறிப்பிடுக.

(iii) இலங்கையில் கூட்டுறவு வணிகத்தின் தோல்வியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் நான்கினைக் குறிப்பிடுக

(iv) அங்கீகாரம் வழங்குபவரைப் போன்று அங்கீகாரம் பெறுபவரும் நிறைவேற்ற வேண்டிய நடவடிக்கைகள் உள்ளன. அங்கீகாரம் பெறுபவரால் நிறைவேற்ற வேண்டிய நடவடிக்கைகள் நான்கினைக் குறிப்பிடுக.

(v) அ) இலங்கையில் அரச துறை சார்ந்த வணிகங்கள் பல்வேறு வகைகளில் செயற்படுகின்றன. அவற்றுள் அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் திணைக்களங்களின் குணாதிசயங்கள் இரண்டினை ஒப்பிட்டு வேறுபடுத்துக.

ஆ) உள்ளூராட்சி நிறுவனங்களின் கீழ் காணப்படும் நிறுவனங்களின் பண்புகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக.

( 20 புள்ளிகள் )

## வினா 07

(i) அ) இலத்திரனியல் கொடுப்பனவுகளை இலகுவாக மேற்கொள்வதற்கு கிடைக்கக் கூடிய நான்கு வசதிகளைப் பெயரிடுக?

ஆ) இன்று குத்தகை வியாபாரம் பிரபல்யமான ஒன்றாக காணப்படுகின்றது. குத்தகை கம்பனிகள் மூலம் வணிகருக்குக் கிடைக்கும் அனுகூலங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

(ii) அ) ஒப்புறுதியாளர் என்பதனை சுருக்கமாக விளக்குக.

ஆ) இலங்கை மத்திய வங்கியின் பிரதிநிதித்துவத் தொழிற்பாடுகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(iii) அ) வணிகர்கள் வங்கியில் நடைமுறைக் கணக்கினை பேணுவதன் மூலம் பெற்றுக் கொள்ளக்கூடிய வசதிகள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) காசோலை ஒன்றில் புறக்குறிப்பிடல் தேவைப்படும் சந்தர்ப்பங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

(iv) நிதி நிறுவனங்கள் கடனட்டைப் பாவனையை வாடிக்கையாளரிடம் அதிகரிப்பதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொள்கின்றன. கடனட்டைப் பாவனையின் மூலம் வாடிக்கையாளர் எதிர்நோக்கும் பிரதிகூலங்கள் இரண்டினையும் வணிகர் பெறும் அனுகூலங்கள் இரண்டினையும் விபரிக்குக.

(v) காப்புறுதியானது வணிகங்களின் நிலைப்புத் தன்மைக்கு எவ்வகையில் பங்களிப்புச் செய்கின்றது என்பதை விபரிக்குக.

( 20 புள்ளிகள் )

## வினா 08

(i) அ) செய்தியொன்றை தயாரிக்கும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் நான்கினைக் குறிப்பிடுக

ஆ) இரு நபர்களுக்கிடையிலான தொடர்பாடலின் பயனுறுதித் தன்மையின் மீது செல்வாக்குச் செலுத்தக்கூடிய நான்கு தடைகளைக் குறிப்பிடுக.

(ii) அ) பெருந்தெரு போக்குவரத்து முறையினை மேம்படுத்துவதற்கு அரசு பாரிய செலவுகளை மேற்கொள்கின்றது. இப்போக்குவரத்து முறையை விருத்தி செய்வதன் மூலம் வணிகர்களுக்கு, நுகர்வோருக்கு முக்கியத்துவமானதாய் அமையும் விதங்கள் இரண்டு வீதம் தனித்தனியாகக் குறிப்பிடுக.

ஆ) போக்குவரத்தும் வழங்கல் சேவையினதும் அனுகூலங்கள் நான்கினை விளக்குக.

(iii) அ) களஞ்சியமொன்றை நிறுவும் பொழுது போக்குவரத்து கட்டணம், ஏற்றி இறக்கல் கட்டணம் இவற்றுக்கு மேலதிகமாக கவனம் செலுத்த வேண்டிய கிரயங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) ஒழுங்கு முறையாக பொருட்களைக் கையாளுவதற்கும் உபகரணங்களைப் பாவிப்பதற்கும் களஞ்சியசாலையில் பொருட்களை இடமாற்றுவதற்கும் உபகரணங்களைப் பயன்படுத்துவதால் பெற்றுக் கொள்ளக்கூடிய இரண்டு அனுகூலங்களைக் குறிப்பிடுக.

(iv) யாழ்ப்பாணத்தில் உள்ள மாம்பழ உற்பத்தி வலயத்திலிருந்து உற்பத்தி செய்யப்படும் மாம்பழங்களை மொத்தமாக கொள்வனவு செய்யும் திரு.தர்சிகன் என்ற முதல்வர் இலங்கையின் பல்வேறுபட்ட சந்தைகளுக்கு விற்பனை செய்வதற்கு வேறுபட்ட முகவர்களை அமர்த்தி உள்ளார். இவர்களில் சயந்தன், தனது விருப்பப்படியே முதல்வரது சார்பில் மாம்பழங்களை கொள்வனவு செய்து விற்பனை செய்து வருவதுடன், அதனடிப்படையில், தரகுப்பணத்தினையும் பெற்றுக்கொள்கின்றார். சங்கர் கொள்வனவாளரையும், விற்பனையாளரையும் தொடர்புபடுத்தி பரிமாற்றம் இடம்பெற உதவுவதுடன் இரு பிரிவினர்களிடமிருந்தும் தரகு கட்டணத்தைப் பெற்றுக் கொள்வார். சாருஜன் முதல்வர் சார்பாக கடனுக்கு விற்பனை செய்து கடன்பணத்தை அறவிடும் பொறுப்புடன் செயற்படுவார். இவருக்கு மேலதிகமாக தரகுப்பணம் வழங்கப்படுவதுண்டு. வில்டன்

முதல்வர் சார்பாக மாம்பழங்களை விற்பனை செய்யும் போது தனது தனிப்பட்ட பெயரில் மேற்கொள்ளத்தக்க முகவராவார்.

அ) மேற்குறிப்பிட்ட முகவர்களான சயந்தன், சங்கர், சாருஜன், வில்டன் ஆகிய ஒவ்வொருவரும் வழங்கும் சேவைகளைப் பொறுத்து பொருத்தமான முகவரின் வகையினுள் உட்படுத்துக.

ஆ) இலத்திரனியல் வர்த்தகம் இன்று வளர்ச்சியடைந்த ஒன்றாகக் காணப்பட்ட போதிலும் அதன் செயற்பாடு வரையறுக்கப்பட்டதாகவே காணப்படுகின்றது. இலத்திரனியல் வர்த்தகத்திற்கான வரையறைகள் நான்கு தருக.

(v) அ) ஒப்பீட்டுக்கிரய அனுகூலத்தினால் நாடொன்றுக்கு கிடைக்கும் நான்கு அனுகூலங்களைக் குறிப்பிடுக.

ஆ) சுதந்திர வர்த்தகத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தும் எவையேனும் நான்கு தடைகளினைக் குறிப்பிடுக

( *20* புள்ளிகள் )